DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | **S.C. 21/2026** |
| Deposition of Witness for | : | **P.W. 1** |
| Name | : | **ராஜபாண்டி** |
| Father's Name | : | **சீனி** |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

**(வழக்கின் எதிரிகள் 1,2, 3, 5, மற்றும் 6 வரை ஆஜர். 4-ம் எதிரி ஆஜர் இல்லை. 4-ம் எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 09.06.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது அல்லூரில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். சாட்சிகள் மருதுபாண்டி, பாண்டி, உடையார், போஸ் ஆகியோர்களை தெரியும். சாட்சி மருதுபாண்டி எனது தம்பி ஆவார். வழக்கின் ஆஜரான எதிரிகள் அனைவரையும் தெரியும் எனது ஊர்க்காரர்கள். நான் முத்தரையர் சமுதாயத்தை சேர்ந்தவர்கள். எதிரிகளும் எனது சமுதாயத்தை சேர்ந்தவர்கள் ஆவார்கள். எனக்கும் எதிரிகளுக்கும் எந்த பிரச்சினையும் இல்லை. எதிரிகள் மீது நான் புகார் கொடுக்கவில்லை.

WEB COPY

2. சுமார் 6, 7 வருடங்களுக்கு முன்பு நான் சிவகங்கை காவல்நிலையம் சென்றபோது போலிசார் என்னிடம் தற்போது காட்டப்படும் ராஜபாண்டி என்ற எனது கையொப்பத்தை மட்டும் எழுதாத வெள்ளை பேப்பரில் பெற்றுக்கொண்டனர். போலிசார் ஊரில் பிரச்சினை இருப்பதால் என்னிடம் கையொப்பம் போடும்படி கேட்டதால் நான் போட்டுக்கொடுத்தேன். புகார்மனுவில் உள்ள ராஜபாண்டி என்ற கையொப்பம் என்னுடையததுதான். அந்த **கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ.1** ஆகும். போலிசார் இவ்வழக்கு சம்மந்தமாக என்னை விசாரிக்கவில்லை.

**(அரசுதரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக அனுமதிக்கும்படி அனுமதி வேண்டப்பட்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டது.)**

**அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை :**

போலிசார் இவ்வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள் என்றும் விசாரணையின் போது இவ்வழக்கு சம்பவகாலத்தின்போது நானும் வழக்கின் எதிரிகளும் ஒரே சமூகத்தை சார்ந்தவர்கள் என்றும் எங்களது சமுதாய சங்கம் தொடர்பாக போர்டு வைப்பதில் எங்களுக்குள் பிரச்சினை ஏற்பட்டது என்றும் அதன் தொடர்பாக எதிரி முத்துக்கிருஷ்ணன் மற்றும் அவரது கூட்டாளிகளுடன் சேர்ந்து எங்களை அசிங்கமான வார்த்தைகளால் திட்டி, எனது வைக்கோர் போரை தீ வைத்து எரித்துவிட்டார்கள் என்றும் இதே போல் எங்கள் ஊரைச் சேர்ந்த உடையார். பாண்டி ஆகியோரின் ஆட்டுக்கொட்டகையை தீ வைத்து எரித்தார்கள் என்றும் மேற்படி எதிரிகளை கையும் களவுமாக பிடிக்கவேண்டி 26.07.2017ம் தேதி அதிகாலை 4.00 மணியளவில் நாங்கள் கண்காணித்து கொண்டிருந்தபோது எதிரிகள் அனைவரும் சிகரெட் பத்த வைக்கும் லைட்டரால் எனது வீட்டிக் கொட்டத்தில் உள்ள ஓலையில் தீ வைத்து எரித்தார்கள் என்றும் நானும் என்னுடன்இருந்தவர்கள் சத்தம் போட்டவுடன் எதிரிகள் அங்கிருந்து ஓடிவிட்டார்கள் என்றும் எதிரிகள் எங்களை பார்த்து அசிங்கமான வார்த்தைகளால் திட்டி கொலை மிரட்டல் செய்தார்கள்

WEB COPY

எனது புகார்மனுவிலும் போலிசார் விசாரணையிலும் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. தற்போது நானும் எதிரிகளும் சமாதானம் ஆகிவிட்டோம் என்றால் சரியல்ல. தற்போது வேண்டுமென்றே எதிரிகளை வழக்கிலிருந்து காப்பாற்ற பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**: இல்லை

**மறு விசாரணை**: இல்லை

**/ஒம்./ சு.மோகன ரம்யா,**
**உதவி அமர்வு நீதிபதி,**
**தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,**
**சிவகங்கை.**

WEB COPY